**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.155 /2019**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | : | **PW.2** |
|---|---|---|
| Name | : | ராமமூர்த்தி |
| Father's / Husband's Name | : | ரங்கைய கவுடர் |
| Village / முகவரி | : | திம்மம்பாளையம்புதூர் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Caste / ஜாதி | : | |
| Calling / தொழில் | : | |
| Religion / மதம் | : | |
| Age / வயது | : | 53 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 9th December 2024.

**முதல் விசாரணை**

நான் திம்மம்பாளையம்புதூரில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். திம்மம்பாளையம் ரங்கசாமி மனைவி சுந்தரம்மாள் என்பவர் 12.09.2019 ம் தேதி எழுதி வைத்த உயில் சம்பந்தமாக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். உயிலை படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அந்த உயிலில் ராஜு என்பவர் கையெழுத்து செய்தார். சாட்சி மீண்டும் நடராஜ் என்பவர் சாட்சி கையெழுத்து செய்ததாக சொல்கிறார்.

வா.சா.ஆ.6 உயில் பத்திரத்தில் முதலில் சுந்தரம்மாள் என்பவர் கையொப்பம் செய்தார். அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். 2 ம் சாட்சியாக நடராஜன் கையொப்பம் செய்தார். அந்த உயில் பத்திரத்தை என்னிடம் வைத்திருக்கச் சொல்லி

கொடுத்தார். சுந்தரம்மாள் இறந்த பிறகு அவரது கணவரிடம் உயில் பத்திரத்தை கொடுத்தேன். சுந்தரம்மாள் உயில் எழுதும் போது நல்ல உடல் ஆரோக்கியமாக இருந்தார். சுந்தரம்மாள் தோட்டத்தில் வைத்து உயில் பத்திரத்தில் கையெழுத்து செய்தேன். சுந்தரம்மாள் கையெழுத்திடும்போது நானும் நடராஜனும் உடன் இருந்தோம். சுந்தரம்மாள் 29.09.2019 ம் தேதி இறந்தார். சுந்தரம்மாள் இறந்த பிறகு 1 வாரம் கழித்து உயில் பத்திரத்தை அவரது கணவரிடம் கொடுத்தேன். உயில் பத்திரத்தை கொடுக்கும்போது கலையரசன் என்பவர் உடன் இருந்தார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.